ஒரு கிளி தூங்குதம்மா
மறு கிளி வேகுதம்மா
வேதனை யார் அறிவார் 2

உனக்குள்ளே இருக்கிற எரிமலை எடுத்து பகைவனை எரி எரி 2
தயக்கமும் கலக்கமும் வருத்தமும் எதுக்கு புதுயுகம் இனி இனி 2

ஒரு கிளி தூங்குதம்மா

மன்னன் மனதின் எண்ணம் நிறைவேறவே
பெண்ணே பெண்ணே கடமை முடிப்பாயடி

ஆயிரம் ஆயிரம் தடைகளை உடைத்து சபதம் முடி முடி 2
உனக்குள்ளே இருக்கிற எரிமலை எடுத்து பகைவனை எரி எரி 2

ஒவ்வொரு இரவும் இங்கே விடியும் —அவன்
வீரம் சொல்லி நாள் தோறும்
ஒவ்வொரு பூவும் இங்கே மலரும் அவன்
பெயரை சொல்லி தினம்தோறும்
இனி தோன்றுகின்ற மாவீரம் எல்லாம்
அவன் பாதையிலே பெண்ணே சுடர் தீபம் ஏற்றிடு

ஆயிரம் ஆயிரம் தடைகளை உடைத்து சபதம் முடி முடி 2

இனி தோன்றுகின்ற மாவீரம் எல்லாம்
அவன் பாதையிலே பெண்ணே சுடர் தீபம் ஏற்றிடும்

ஒரு கிளி தூங்குதம்மா

உனக்குள்ளே இருக்கிற எரிமலை எடுத்து பகைவனை எரி எரி 2
தயக்கமும் கலக்கமும் வருத்தமும் எதுக்கு புதுயுகம் இனி இனி 2

பயந்தவர் பார்வையில் பெண்ணே சின்ன பனித்துளியும் கடலளவு
துணிந்தவர் மனதில் பெண்ணே வெறும் இலை கடலும் துளியளவு
அந்த சூரியனும் வாழ்வில் துாயரமில்லை
புது தேசமது மலர்ந்தால் விழி நீரை மாற்றிடு

உனக்குள்ளே இருக்கிற எரிமலை எடுத்து பகைவனை எரி எரி 2

அந்த சூரியனும் வாழ்வில் துாயரமில்லை
புது தேசமது மலர்ந்தால் விழி நீரை மாற்றிடு

ஒரு கிளி தூங்குதம்மா

ஆயிரம் ஆயிரம் தடைகளை உடைத்து சபதம் முடி முடி 2

தயக்கமும் கலக்கமும் வருத்தமும் எதுக்கு புதுயுகம் இனி இனி 2
உனக்குள்ளே இருக்கிற எரிமலை எடுத்து பகைவனை எரி எரி 2